**முசலி பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 பெப்ரவரி 2020 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 22 யூலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து முசலி பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயமானது தவறுதலாக கணக்கறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எதிர்காலத்தில் வெளிப்படுத்தப்படும் | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதி மூலம் முசலி பிரதான அலுவலகத்தில் செய்யப்பட்ட திருத்த வேலைகளின் பெறுமதி ரூபா 69,150 ஆனது கட்டிட கணக்கினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் சொத்துக்களின் பெறுமதி ரூபா.69,150 ஆல் கூட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் திரண்ட நிதி கணக்கானது அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் காலங்களில் சரியான முறையில் கணக்குப் பதிவுகளை பதிவதற்கு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | திருத்த வேலைகளின் செலவினங்கள் நடைமுறை செலவீனமாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i)மீளாய்வாண்டில் 13 வருமானங்களின் விடய பாகுபாடு நிரலில் குறிப்பிடப்பட்ட தொகைகளுக்கும் அரசிறைப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட தொகைகளுக்கும் இடையில் ரூபா.1,040,276 வேறுபாடுகள் காணப்பட்டிருந்தது. | குறித்த தவறானது 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கறிக்கையில் நாளேட்டுப்பதிவுகள் மூலம் சீர்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ii) சபையின் இறைச்சிக்கடை வாடகை நிலுவை பேரேட்டுக் கணக்கில் ஆரம்ப மீதியாக ரூபா 1,019,883 காணப்பட்ட போதிலும் இறுதிக்கணக்கில் அரசிறைக்கடனாளிகள் கணக்கில் ஆரம்ப மீதியாக ரூபா 1,238,924 ஆக காட்டப்பட்டிருந்ததினால் ரூபா 219,040 பெறுமதியானது வேறுபாடாக காணப்படுகின்றது. | எதிர்வரும் நிதியாண்டில் கவனத்தில் கொள்ளப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் | இவ்வாறான கணக்கீட்டு வழுக்கள் தவிர்க்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பிரிவு 16(2) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் இலக்கம் 371 | பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 149,469 ஓய்வூதியக் கொடுப்பனவு தீர்ப்பனவு | குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செய்யப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,046,655 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,821,210 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31 திசெம்பர் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31 திசெம்பர் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகைகள் | 4,526,000 | 4,061,700 | 2,201,924 | 4,698,200 | 5,268,494 | 1,475,171 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 515,000 | 952,470 | - | 490,000 | 566,371 | - |
| ஏனைய வருமானம் | 4,274,000 | 7,123,946 | 21,694 | 3,152,500 | 6,337,717 | 523,804 |
| | **9,315,000** | **12,138,116** | **2,723,618** | **8,340,700** | **12,712,582** | **1,998,975** |

### 2.3.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடை வாடகை மூலம் 2015 ஆம் ஆண்டிலிருந்து வருமதியான நிலுவை ரூபா 1,019,883 தொடர்பில் சபையினால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களால் 2015 ஆம் ஆண்டு மாட்டிறைச்சிக்கடை நிலுவையை அறவிடும் பொருட்டு சட்டத்தரணி மூலம் நிலுவையை அறவிடுவதற்கு சபையில் தீர்மானத்தை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே வருமானப் பரிசோதகர்களால் சபையில் தீர்மானம் பெறும் பொருட்டு தவிசாளருக்கு கடிதம் மூலம் அனுமதி கோரப்பட்டது. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,602,419 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதி மன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீதிமன்ற தண்டப்பணத்தை உரிய காலத்தினுள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,016,750 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | முத்திரைத் தீர்வையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | முத்திரைக் கட்டணங்களை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி யின்2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ம் ஆண்டு கடலோர மாசு கட்டுப்பத்தும் செயற்திட்டம் எம்மால் செயல் படுத்தப்பட்டதுடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கும் கடல்கள் மற்றும் கடல்சார் வளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க 04 ஆகஸ்ட் 2016 ஆந் திகதிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கமைய 18 எண்ணிக்கையான தகவல் கோரல்கள் தொடர்பில் சபையினால் ஒரு வருட காலத்திற்கு மேலாக கோரப்பட்ட தகவல்கள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை இலக்கம் 01ம், 02 மற்றும் 4ம்,5ம்,6,7ம்,8ம், கோரிக்கைகள் அபிவிருத்திக்கு நிதி கிடைக்கும் போது முன்னெடுக்கப்படும். மேலும் 3ம்,9ம்,10ம்,16ம்,17ம் கோரிக்கைகள் நிறைவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியினுள் உரிய தரப்பினருக்கு தகவல்கள் வழங்கப்படநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 இல் சபைக்கு சொந்தமான தண்ணீர் பவுசர் மூலம் வீட்டுத்திட்டத்திற்கு விநியோகிக்கப்பட்ட குடிநீர் கட்டண வருமதி ரூபா 327,264 இனை உரிய காலத்தில் அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2000 க்கு மேற்பட்ட நிலுவையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | உரிய காலத்தில் நிலுவையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) சபையினால் பெறப்பட வேண்டிய வாகன வாடகை நிலுவை ரூபா 95,800 கடந்த 04 வருடங்களாக பெற்றுக்கொள்ள ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பெறப்பட வேண்டிய வாகன வாடகை நிலுவைகளை அறவிடும் பொருட்டு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பபட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | வருமதியான வாகன வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான ஜேசிபி (JCB) மற்றும் மோட்டர் கிறேடர் (Motor Grader) வாடகை மூலம் பெறப்பட வேண்டிய நிலுவை ரூபா 83,250 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபை வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்காக பெறப்பட வேண்டிய நிலுவைதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் | பெறப்பட வேண்டிய வாகன வாடகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### (அ) பதவியினர் கடன்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் செயலாளரினால் 27 மே 2019 ஆம் திகதி தொடக்கம் பதவி வெறிதாக்கல் பற்றிய அறிவித்தல் கடிதம் வழங்கப்பட்ட சபையின் | குறித்த உத்தியோகத்தரிடமிருந்து கடனை அறவிடுவதற்கு முதலாவது நினைவூட்டல் | உத்தியோகத்தரிடமிருந்து உரிய காலத்தினுள் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் மீதி ரூபா 12,400 வினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் | |

**(ஆ) ஊழியர் பிணைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PF/01/2017 இலக்க (அ) 04 மாாச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்று நிருபத்தின்படி பிணைப்பணம் செலுத்தப்படவேண்டிய உத்தியோகத்தர்கள் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த ஊழியர் பிணைத்தொகை ரூபா 187,500 ஆன போதும் அத்தொகை செலுத்தப்படாமல் ரூபா 66,500 மட்டுமே செலுத்தப்பட்டமையால் ரூபா 121,000 குறைவாக செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறைவாக அறவிடப்பட்ட தொகையினை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2019 இல் பௌதீக ரீதியாக காணப்பட்ட கையிருப்பிலுள்ள களஞ்சிய பொருட்கள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக கணக்கில் சேர்க்கப்பட வில்லை எதிர்வரும் காலங்களில் வருடாந்தக் கணக்கறிக்கையில் சேர்ப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கையிருப்பிலுள்ள களஞ்சிய பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் இருந்து வரும் 18 கட்டடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து சபையின் பெயருக்கு நாளதுவரை மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளை சட்ட ரீதியாக கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு முசலிப் பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் | உரிமை மாற்றம் செய்யப்படாத காணிகளை உரிமை மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். |

### 3.5.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) முசலி பிரதேச சபையின் PF– 3331 இலக்க வாகனத்தின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணையின் பிரகாரம் 01 மே 2019 தொடக்கம் 30 யூன் 2019 திகதி வரை 6,690 கிலோ மீற்றர் பாவனையிலீடுபடுத்திய போதும் ஒவ்வொரு தனிப்பட்ட பிரயாணங்களிற்கான நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | வாகனப் பயன்பாட்டின் நோக்கம் குறிப்பிடப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது | பிரயாணத்தின் நோக்கங்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) சபையின் வாகனமானது மன்னார் மாவட்டத்துக்கு வெளியே பயன்படுத்துவதற்கு மாகாண உள்ளுராட்சி ஆணையாளரிடம் முன் அனுமதி பெறப்பட வேண்டும் எனினும் PF– 3331 இலக்க வாகனமானது சபையின் கௌரவ தலைவரினால் புத்தள மாவட்டத்திற்கு எடுத்து சென்றுள்ளதுடன் 1,150 கிலோ மீற்றர் பாவனையிலீடுபடுத்தப்பட்ட போதும் பிரயாணத்தின் நோக்கம் குறிப்பிடப்படவில்லை. | அனுமதி தற்போது வரை பெறப்பட வில்லை,எதிர்வரும் காலங்களில் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய முறையில் அனுமதி பெறப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் பிரயாணத்தின் நோக்கம் சரியான முறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) PFD/ASD/02/Veh.Circular 2015 இலக்க 10 யூலை 2015 ஆந் திகதிய நிதி அமைச்சின் அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 02/2015 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபையினால் பயன்படுத்தப்படாத 13 வாகனங்கள் தொடர்பாக கடந்த 07 ஆண்டுகளாக சபையினால் தொடர் நடவடிக்கைகள்எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது பாவனைக்குதவாத வாகனங்களை விலைமதிப்பீடு செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | சுற்றறிக்கைக்கு அமைவாக உரியநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய மூலதன ஒப்பந்த வேலைகள் தொடர்பில் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடாமல் மீளாய்வாண்டில் 02 வேலைகள் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படா வண்ணம் தயாரிக்கப்படும். | மூலதன ஒப்பந்த வேலைகளை உள்ளடக்கி வினைத்திறனான முறையில் வருடாந்த பாதீடு தயாரிக்கப்படல் வேண்டும். |